# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆறாவது கூட்டத் தொடர்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

- - - -

## மொத்த வினாக்கள் 10

- - - -

### கால்வாயைத் தூர்வாருதல்

***91 திரு. ஜே.ஜி. பிரின்ஸ் (குளச்சல் ):**

மாண்புமிகு **நீர் வளங்கள்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) கன்னியாகுமரி மாவட்டம், ஏ.வி.எம். கால்வாயைத் தூர்வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா ?
ஆ) ஆம் எனில், எப்போது ?

- - - -

### நகராட்சி அலுவலகக் கட்டடம்

***92 திரு. இரா. மாணிக்கம் (குளித்தலை):**

மாண்புமிகு **நகராட்சி நிருவாகம்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா : - அ) குளித்தலை நகராட்சி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?
ஆ) ஆம் எனில், எப்போது ?

- - - -

### புதிய சிறை

***93 திரு. T.M. தமிழ்செல்வம் (ஊத்தங்கரை):**

மாண்புமிகு **சட்டம்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- ஊத்தங்கரையில் புதிய சிறை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

----

## புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்

***94 முனைவர். த. இனிகோ இருதயராஜ் (திருச்சிராப்பள்ளி கிழக்கு):**

மாண்புமிகு **வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- திருச்சிராப்பள்ளி, 59வது வார்டு, கல்லுக்குழி பகுதியில் உள்ள பழுதடைந்த குடியிருப்புகளுக்கு மாற்றாக புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா ?

----

## தொழிற்சாலை

***95 திரு. தங்கப்பாண்டியன், எஸ். (ராஜபாளையம்):**

மாண்புமிகு **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- ராஜபாளையம் தொகுதியில் மாம்பழக் கூழ் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

----

## தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்

***96 திரு. கே.பி. முனுசாமி (வேப்பனஹள்ளி):**

மாண்புமிகு **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- டாக்டர் உ.வே. சாமிநாதர் அவர்களின் பிறந்த நாளை தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாட அரசு முன்வருமா ?

----

## மருத்துவ உபகரணங்கள்

***97 திரு. கே.ஏ. செங்கோட்டையன் (கோபிசெட்டிப்பாளையம்):**

மாண்புமிகு **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) கோபிசெட்டிபாளையம்

தொகுதி, P. வெள்ளாபாளையம், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்க அரசு முன்வருமா ?

ஆ) ஆம் எனில், எப்போது ?

----

## பேருந்து வசதி

***98 திரு. ஐ.பி. செந்தில் குமார் (பழனி):**

மாண்புமிகு **போக்குவரத்து** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- கொடைக்கானல் முதல் வில்பட்டி ஊராட்சி, பேத்துப்பாறை வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

----

## மாசுக்கட்டுபாடு வாரிய அலுவலகம்

***99 திரு. இ. கருணாநிதி (பல்லாவரம் ):**

மாண்புமிகு **சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றம்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) பல்லாவரம் தொகுதி, நாகல்கேணியில் தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரிய அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

ஆ) ஆம் எனில், எப்போது ?

----

## மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்

***100 திரு. சேவூர் S. இராமச்சந்திரன் (ஆரணி):**

மாண்புமிகு **தொழிலாளர் நலன் - திறன் மேம்பாடு** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தைப் பிரித்து ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு புதிய அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது ?

----

**சென்னை-600009.** **முனைவர் கி. சீனிவாசன்,**

26 ஜூன், 2024. முதன்மைச் செயலாளர்